Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No.**CC.NO. 421/2025**
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No. 8 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. மதியழகன் | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. ராமன் | **கிராமம்/ ஊர்** | உமராபாத் |
| **வயது** | 55 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 06th day of April 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

1. நான் தற்போது உமராபாத் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆலங்காயம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த சமயம், கடந்த 01.11.2023 அன்று நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பகல் 13.00 மணிக்கு நிலையம் திரும்பி நிலைய குற்ற எண். 290/2023, இதச பிரிவுகள் 294(a),323,506(ii) ன் பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.6 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.)** பின்னர் 01.10.2023 மதியம் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெள்ளயங்கிரி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ. 7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் புகார்தாரரின் காலி மனையிடம் இருந்து மண்வெட்டி காம்பு ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு சொத்தினை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**அந்த படிவம் – 91 அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான **மண்வெட்டிகாம்பு என்னால் அ.சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அசா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயசான்றும் வாக்குமூலமும் பெற்றேன். அந்த காயச்சான்றுகள் ஏற்கனவே அ.சா.ஆ.4,5 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. விஜய் அவர்களிடம் ஒப்படைத்தேன். வழக்கை மேல் விசாரணைக்காக எடுத்து கொண்ட அவர் பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்த போது என்னிடம் கூறிய விவரங்களையே அவரிடமும் கூறியதால் அவர் புதியதாக வாக்கு மூலம் ஏதும் பதிவு செய்யவில்லை. பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு. விஜய் அவர்கள் தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(a),323,506(ii) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த பிரச்சனை நிலம் சம்பந்தமாக உள்ள பிரச்சனையின் காரணமாக ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த நிலம் யாருக்கு சொந்தமானது என எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் நான் விசாரித்ததில் புகார்தாரருடையது என்று கூறினார். நான் ஆவணங்களை வாங்கி பார்க்கவில்லை. இரு தரப்பினரிடம் நான் தான் புகார் வாக்கு மூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். எதிரிகளும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 31.10.2023 அன்று சம்பவம் நடந்திருக்க 01.10.2023 அன்று விசாரணை செய்ததாக குறிப்பிட்டுள்ளதற்கு காரணம்

என்னவென்றால் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சம்பவ இடம் செல்லாமல் மகசர் தயார் செய்ததால் சம்பவயிடத்தை சரியாக குறிப்பிடவில்லை என்றாலும், அவ்வாறு சென்றிருந்தால் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்திருக்க மாட்டேன் என்றாலும் சரியல்ல. நிலம் சம்பந்தமாக இருந்த முன் விரோதத்தின் காரணமாக எதிரிகளின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)
Tirupathur.